# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529 Email: coteecitu_hqchennai@yahoo.com
Fax No: 044-28516574 coteecitu@gmail.com

CITU


**சுற்றறிக்கை எண் 9/2013** **நாள் : 01/03/2013**

*பெறுநர்*

***மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்,***
***கிளைச் செயலாளர்கள் மற்றும்***
***மாநில செயற்குழு உறுப்பினர்கள்.***

அன்பான தோழரே,

வணக்கம்,

## ஊதிய உயர்வு பேச்சு வார்த்தை குறிப்பு

1.12.2011 முதல் மின்வாரிய ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வுக்கான பேச்சு வார்த்தை மின்ஊழியர் மத்திய அமைப்பு எடுத்த முன்முயற்சியின் காரணமாக 28.02.2013 அன்று நடைபெற்றது. அப் பேச்சு வார்த்தையில் மின்ஊழியர் மத்திய அமைப்பின் சார்பாக தோழர்கள் எஸ்.எஸ். சுப்பிரமணியன், கே. விஜயன், ஈ. அந்தோணி, எம்.வெங்கடேசன், எஸ். ராஜேந்திரன், வி. இளங்கோ, கே. ரவிச்சந்திரன், டி. அறிவழகன், ஏ. பழனி, டி.ஜெய்சங்கர்,டி. கோவிந்தராஜு ஆகியோர் கலந்து கொண்டனர். வாரியத் தரப்பில் இயக்குநர்/நிதி- (பேச்சு வார்த்தைக்குழு தலைவர்), இயக்குநர் - உற்பத்தி, இயக்குநர்-விநியோகம், இயக்குநர் - தொடரமைப்புக் கழகம்,வாரிய செயலாளர், தலைமைப் பொறியாளர்/ பணியமைப்பு, தலைமை நிதி கட்டுப்பாட்டு அலுவலர் (பொது), தொழில்உறவு ஆலோசகர் ஆகியோர்கள் பேச்சுவார்த்தையில் பங்கு பெற்றனர்.

பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட இயக்குநர்/நிதி அவர்கள் ஊதிய உயர்வு பேச்சு வார்த்தைக்கு அழைத்து உள்ள போதிலும் மின்வாரியம் சார்பாக ஊதிய உயர்வுக்கான ஆலோசனை எதுவும் கொடுக்க முடியாத அளவிற்கு மின்பற்றாக்குறை உள்ளது என்றும், மே, ஜுன் மாதங்களில் இந்த மின்பற்றாக்குறையில் ஓரளவுக்கு நிவர்த்தி காணப்படும் என்றும், அதன் பின்னர் தொடர்ச்சியாக ஊதிய உயர்வு சம்மந்தமான ஆலோசனை வழங்கப்பட்டு, பேசி ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் முடிக்கப்படும் என்றும் இதற்கு இடைப்பட்ட காலத்தில் பணிப்பதிவு சம்மந்தமாகவும் வாரியம் பேச உள்ளதாகவும் அவர் முன்னுரையாக பேச்சு வார்த்தையை துவக்கி வைத்தார்.

பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட நாம் மின்வாரிய ஊழியர்கள் மிகவும் பொறுமையானவர்களாகவும் சகிப்புத் தன்மை கொண்டவர்களாகவும் உள்ள காரணத்தினால் தான் 15 மாதங்களுக்கு பின்னரும், பொறுமையும், செ

தாழில்உறவும் காத்து வருகின்றனர். ஊழியர்கள் கடைபிடிக்கும் பொறுமையை மேலும் சோதிக்காமல் மின்பற்றாக்குறையோ, நிதிப்பற்றாக்குறையோ காரணம் காட்டாமல் பேச்சு வார்த்தையை துவங்கி

தொடர்ந்து நடத்தி முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று நமது தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

மின்வாரிய ஊழியர்கள் பொறுமையானவர்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாகத்தான் ஒப்பந்த சரத்தில் ஒன்றான ஆண்டுக்கு ஆண்டு கூடும் மின் இணைப்புகளுக்கு ஏற்ப பதவிகளை அனுமதிக்க வேண்டும் என்பதைக் கூட வாரியம் நடைமுறைப்படுத்தாத போது கூட இருக்கின்ற ஊழியர்கள் எண்ணிக்கையிலேயே வாரியப் பணியை தொய்வின்றி செய்கின்றனர் என்பதை கோடிட்டு காண்பித்து உயர்ந்து வரும் மின் இணைப்புகளுக்கேற்ப பதவிகளை அனுமதிக்க வேண்டும் என்று நமது தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

மின்ஊழியர் மத்திய அமைப்பை பொருத்த வரையில் 1.12.2011 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வுக்கான கோரிக்கைப் பட்டியலை முதற்கட்டமாக 21.11.2011 அன்றும், முழுமையான கோரிக்கைகளை 29.06.2012 அன்றும் வாரியத்திற்கு கொடுத்துள்ளதையும் சுட்டிக் காட்டி ஊதிய உயர்வுக்கான பேச்சு வார்த்தை துவங்குவதற்கு முன் 18.11.2009 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் மீது இப்போதாவது தொடர்ச்சியான பேச்சு வார்த்தையும் அதனையொட்டி தீர்வும் காணப்பட வேண்டும் என்பதை நமது தரப்பில் வலுவாக பதிவு செய்தோம்.

18.11.2009 ஒப்பந்தத்தில் 3 மாத காலத்திற்குள் பேசி முடிக்கப்படும் என்று சொல்லப்பட்டவைகளில் அனல் மின் ஊழியர்களின் பதவி உயர்வு, தினக்கூலி தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு, 1982ல் பணியில் சேர்ந்த கணக்கீட்டாளர்களுக்கு முதல் ஒன்றரை ஆண்டு பணிக்காலத்தை கணக்கில் கொள்வது, தினக்கூலி பணிக் காலத்தை ஓய்வூதியம் கணக்கிட அரசு உத்தரவை அமல் படுத்தியது. தலைமையக கண்காணிப்பாளர்களுக்கு செயலகப்பிரிவு பிரிவில் பணியாற்றும் பிரிவு அலுவலர்க்கான ஊதியத்தை அளித்தது போன்ற கோரிக்கைகள் தீர்வு காணப்பட்டபோதும் ஒப்பந்தத்தில் ஏற்பட்டபல கோரிக்கைகள் தீர்வு காணப்படாத நிலையை ஒவ்வொன்றாக விளக்கி தீர்வுக்காக வலியுறுத்தினோம்.

1. விநியோகப் பிரிவுகளில் பணியாற்றிய மின்பாதையாளர்களை, மின்பாதை ஆய்வாளராக பதவி மாற்றம் செய்ததைப் போல, விநியோகப் பிரிவு அல்லாத குறிப்பாக அனல்,புனல், பொதுக் கட்டுமான வட்டம், சிவில் பிரிவில் உள்ள பதவிகளையும் அப்கிரேடு செய்ய வலியுறுத்தப்பட்டது.

2. அனல் பிரிவில் பணியாற்றும் களப்பிரிவு ஊழியர்களுக்கு பதவி உயர்வு அளித்ததைப் போல புனல், பொதுக் கட்டுமான வட்டம், சிவில் பகுதியில் பணியாற்றும் ஊழியர்களுக்கு பதவி உயர்வுக்கான வாய்ப்பை பரிசீலிக்க அமைக்கப்பட்டுள்ள குழுக்கள் செயல்படாமல் உள்ளதை சுட்டிக் காண்பித்து அந்த கமிட்டிகளை செயல்பட வைத்து அறிக்கையைப் பெற்று அதன் மீது பேச்சு வார்த்தை நடத்தி பதவி உயர்வு வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்று நமது தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

   பொதுக் கட்டுமான வட்டத்தைப் பொறுத்த வரையில் அதற்காக அமைக்கப்பட்ட குழு ஓர் அறிக்கையை அளித்துள்ளது. அறிக்கை பரிசீலனையில் உள்ளது பரிசீலனையை முடித்து அதற்கான உத்தரவு வெளியிடப்படும் என்றும், புனல், சிவில் பிரிவுகளைப் பொறுத்த வரையில் அதற்காக அமைக்கப்பட்ட கமிட்டிகள் உடனடியாக கூடி (15 நாட்களுக்குள்) பேசி அறிக்கையை அளிக்க வேண்டும் என்றும்அதன் மீது 30.4.2013 -க்குள் முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்றும் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

   வரைவாளர், தலைமை வரைவாளர், செவிலியர், தொழில் நுட்ப உதவியாளர்கள்,

சுருக்கெழுத்தர், டெஸ்டர் கெமிக்கல் போன்ற பதவிகளில் பணியாற்றுவதற்கு தமிழக அரசால் கொடுக்கப்படும் ஊதியத்திற்கும், மின்வாரியத்தால் அளித்து வரும் ஊதியத்திற்கும் உள்ள வித்தியாசத்தை மாற்றி அமைக்க வேண்டுமென நமது தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

3. விடுபட்டுப்போன ஒப்பந்த தொழிலாளர்களை பட்டியலிட்டு அடையாளங்கண்டு நிரந்தரப்படுத்திட வேண்டும் என்று நமது தரப்பில் வலியுறுத்தியதற்கு திட்டங்களில் இருந்து விவரங்கள் கேட்கப்பட்டுள்ளது விவரங்களை கேட்டு பரிசீலிப்பதாக பதில் அளிக்கப்பட்டுள்ளது.

4. பகுதி நேர ஊழியர்கள் பணி நிரந்தரத்தில் விடுபட்டுபோன பகுதி நேர ஊழியர்களை பணி நிரந்தரம் செய்திட வேண்டும், நிரந்தரப்படுத்தப்பட்ட பகுதி நேர ஊழியர்களுக்கு வழங்கும் அனைத்து சலுகைகளும் அளித்திட வேண்டும் என்றும், புதியதாக துவங்கப்பட்ட அலுவலகங்களுக்கு பகுதி நேர ஊழியர்களை பயன்படுத்த, பகுதி நேர ஊழியர்கள் பதவிகளை அனுமதித்திட வேண்டும் என்றும் நமது தரப்பில் வாதிட்ட போது நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் பணிநிரந்தரம் செய்வதில் விடுபட்ட ஊழியர்களை பட்டியலிட்டு கொடுத்தால், பணிநிரந்தரம் பரிசீலிக்கப்படும் என்றும், சலுகைகளை விரிவாக்கம் செய்வது, புதிய பதவிகளை அனுமதிப்பது சம்மந்தமாக பரிசீலிப்பதாக வாரிய தரப்பில் பதிலளிக்கப்பட்டது.

5. மின்வாரிய செயலகப்பிரிவில் பணியாற்றும் ஊழியர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 15 முதன்மை பிரிவு அலுவலர் பதவிகளை உருவாக்குவதாக ஏற்றுக் கொண்டுள்ளதை அமல்படுத்த வேண்டுமென நமது தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

6. மின்வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு தேர்வுநிலை வழங்கும் போது அடுத்த பதவி உயர்வுக்கான சம்பளத்தை அளித்திட வேண்டும் என்று நமது தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

7. மின்வாரிய தணிக்கைப் பிரிவில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஏற்கனவே வழங்கியதைப் போல சிறப்பு அலவன்ஸ் வழங்க வேண்டும் என நமது தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

8. விடுபட்டு போன கோட்டங்களுக்கு உதவி நிர்வாக அலுவலர் பதவியையும், அதை போல 23 கோட்டங்களுக்கு வழங்க வேண்டிய மதிப்பீட்டு அலுவலர் பதவிகளை உடனடியாக அனுமதிக்கப்பட வேண்டும் என்று நமது தரப்பில் வலியுறுத்திய போது அதன் மீது உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வாரியத்தின் சார்பில் சாதகமான பதில் அளிக்கப்பட்டது.

9. வருவாய் பிரிவிற்கு இரண்டு பதிவறை எழுத்தர் லீவு ரிசர்வ் அசசர், உப கோட்ட பிரிவிற்கு இரண்டு வணிக ஆய்வாளர் பதவிகளை அனுமதிக்க வேண்டும் என நமது தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

10. 1.12.2002-ல் சிறப்பு நிலை பதவிகள் உருவாக்கப்பட்ட போது, அந்த சிறப்பு நிலை பதவிக்கு சென்ற இளையவர்கள், அதிக ஊதிய பொருத்தமும், பதவி உயர்வு பெற்ற சீனியர்கள் குறைவான ஊதிய பொருத்தமும் பெறுகின்ற நிலையை மாற்றி அமைக்க வேண்டும் என்று நமது தரப்பில் வலியுறுத்தப்பட்டது அதை ஏற்றுக் கொண்டு அதை உடனடியாக சரி செய்யப்படும் என்ற வாக்குறுதி தரப்பட்டது.

11. வாரிய பணிக்காலத்தில் பதவி உயர்வில் உள்ள தேக்கநிலையை அகற்றும் வகையில் ஒட்டுமொத்த பணிக்காலத்தில் 3 பதவி உயர்வுகள் அளிக்கப்பட வேண்டும் என்று ஒப்பந்தத்தில் உள்ளதை சுட்டிக்காட்டி அதற்கான நடவடிக்கையை நமது தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

12. தமிழக மின்வாரியத்தில் உள்ள பயிற்சி காலம் என்பதை முற்றிலுமாக அகற்றிட வேண்டும், அதுவரையில் ஒரே வகையான பயிற்சி காலத்தை அனைவருக்கும் அமல்படுத்திட வேண்டும் என்று நமது தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

13. புனல் மின்உற்பத்தி வட்டத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஐ.எல்.சி அலவன்சை அதே பகுதியில் பணியாற்றும் விநியோகப் பிரிவு ஊழியர்களுக்கும் அளிப்பதாக ஏற்றுக் கொண்டதை அமல்படுத்த வேண்டும் என்று நமது தரப்பில் வலியுறுத்தியதற்கு வாரியம் அதற்கான நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்துள்ளது.

14. மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களுக்கு அவர்களுக்கு அளித்த கூலி ரூ.70-லிருந்து ரூ. 120/- ஆக உயர்த்திய போதிலும் அது இப்போதுள்ள விலைவாசி ஏற்றத்திற்கு சிறிதும் ஏற்புடையது அல்ல என்றும், இதர பல பொதுத்துறைகளில் பணியாற்றும் தினக்கூலி தொழிலாளிகளுக்கு குறைந்தபட்ச ஊதியமாக ரூ. 250/-க்கு மேல் அளிப்பதையும் சுட்டிக்காட்டி மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளிக்கு சமவேலைக்கு சமஊதியம் என்ற அடிப்படையில் கள உதவியாளர்களுக்கு ஒரு நாளைக்கு வழங்கும் ஊதியத்தை, ஒரு நாள் ஊதியமாக அளித்திட வேண்டும் என்று நமது தரப்பில் வாதிட்ட போது வாரியம் அந்த கோரிக்கையின் நியாயத் தன்மையை ஏற்று உடன்பரிசீலிப்பதாக வாக்குறுதி அளித்துள்ளது.

15. 1.12.2007க்கு பின்னர் சிறப்பு நிலை சம்பள பொருத்தம் செய்யும் போது ஒரு உயர்வு அதற்கு சமமான அடிப்படை சம்பளத்தில் 3 சதவீதம், உயர் பதவிக்கு அளிக்கப்படும் கிரேடு பே போன்றவைகள் அளிப்பதாக ஏற்றுக்கொண்டதை அமல்படுத்த வேண்டும் என நமது தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவை தவிர மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பிரிவு அலுவலகங்களுக்கு தொழிற்நுட்ப உதவியாளர்களை பணியில் நியமிப்பது, துணை மின்நிலையங்களுக்கு இளநிலை பொறியாளர், இரண்டாம் நிலை பதவிகளை நிரப்புவது, கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களின் பணி நிலைமைகளை ஒப்பந்தத்திற்கு மாறாக மாற்றியமைப்பதை கைவிட வேண்டும் என்பன போன்றவைகள் வலியுறுத்தப்பட்டது.

நீண்ட நாட்கள் இடைவெளிக்குப் பிறகு ஊதிய உயர்வு சம்மந்தமாக பேச்சு வார்த்தை நடைபெற்ற போதிலும், ஊதிய உயர்வுக்கான வாரியத்தின் ஆலோசனையோ, அதன் மீது ஒரு உயிரோட்டமான பேச்சு வார்தையோ நடைபெறவில்லை. பெயரளவிற்கான பேச்சுவார்த்தையை உயிரோட்டமான பேச்சு வார்த்தையாக மாற்றுவதற்குண்டான நடவடிக்கைகளில் மின்வாரிய ஊழியர்கள் ஈடுபட வேண்டியதன் அவசியம் ஏற்பட்டுள்ளது.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.